# சம்ஸ்கிருத காவியவியல் நூல்களுள் அதிகமான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்தும் குவலயானந்தம் - ஓர் ஒப்பியலாய்வு

S. நவநீதகிருஷ்ணன்

**ஆய்வுச்சுருக்கம்**

*சம்ஸ்கிருத காவியவியல் நூல்களுள் குவலயானந்தம் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை விளக்கியுள்ளது என்பதை ஒப்பீட்டு ரீதியில் நிறுவுதலை நோக்காகக் கொண்ட இவ்வாய்வானது விவரண முறைமையினை அடிப்படையாகக கொண்டுள்ளது. சாத்ருஸ்யகர்ப்ப வகை சார்ந்த ஒற்றுமைத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட அலங்காரங்களாக முப்பத்தியொரு அலங்காரங்கள் கூறப்படுகின்றன. அவையாவன உபமா, உபமேயோபமா, அநன்வய, ஸ்மரண, ரூபக, பரிணாம, ஸந்தேஹ, ப்ராந்திமத், உல்லேக, நிஸ்ச்சய, அபஹ்னுதி, உத்பிரேஷா, அதிசயோக்தி, துல்யயோகிதா, தீபக, ப்ரதிவஸ்தூபமா, த்ருஷ்டாந்த, நிதர்சனா, வ்யதிரேகா, ஸஹோக்தி. விநோக்தி, சமாசோக்தி, பரிகரா, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஹேது, அனுகூல, ஆஷேப என்பனவாகும். இவற்றுள் நிஸ்ச்சய, அனுகூல ஆகிய இரு அலங்காரங்களைத் தவிர ஏனைய இருபத்தொன்பது அலங்காரங்களையும் குவலயானந்தம் விளக்குவதால் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை குவலயானந்தம் வரைவிலக்கணப்படுத்தியுள்ளமை ஒப்பீட்டு ரீதியில் நிறுவப்பட்டுள்ளது.*

திறவுச் சொற்கள் - சம்ஸ்கிருத இலக்கணம், சம்ஸ்கிருத காவியம். அலங்காரங்கள், த்வனிக்கோட்பாடு. நியாயமூலங்கள்

## சம்ஸ்கிருத காவியவியல் - அறிமுகம்

சம்ஸ்கிருத காவியவியல் என்பது மிகப்பரந்து விளங்கும் பலகோட்பாடுகளின் தொகுதியாக அமைவது. இச்சிந்தனையின் தோற்றுவாய் குறித்து நோக்கும் போது சமஸ்கிருத காவியவியல் நூல்களின் தோற்றத்தினைத் தோற்றுவாயாகக் கொள்வதா அல்லது படிப்படியாக உருமாற்றம் பெற்ற அல்லது சிந்தனை முதிர்ச்சியின் விளைவாலேற்பட்ட மாற்றங்களை உள்ளடக்கிய கோட்பாடுகளின் அடிப்படையாக அமைந்த எண்ணங்களின் தோற்றத்தைத் தோற்றுவாயெனக் கொள்வதா? என்பது ஆய்வுக்குரியதாகும். கலைநோக்கில் கோட்பாடுகள் உணர்வுடன் தொடர்புபட்டவையாகக் காணப்படுவதால் உணர்வின் அடிப்படையில் ஏற்பட்ட எண்ணங்களின் விளைவே கலைக்கோட்பாடுகளின் உருவாக்கம் என்ற சிந்தனை பொருத்தமானதாகவே காணப்படுகிறது. மனிதனின்சிந்தனையுட்புகுந்த இக்கோட்பாடுகள் செம்மையாக்கப்பட்ட பின் எழுத்துருப்பெற்றிருக்க வாய்ப்பிருப்பதால் “தோற்றம்” என்ற ஆழ்ந்த பொருள் தரும் சொல் எண்ணங்களின் தோற்றத்தையே உணர்த்தி நிற்பதாகக் கொள்வதில் தவறில்லை. இவ்வகையில் இத்தகைய எண்ணங்கள் எப்போது தோற்றம் பெற்றன என்பது அடுத்துச் சிந்திக்க வேண்டிய விடயமாகிறது. சமஸ்கிருத காவியவியலாளர்கள் தத்தமது கோட்பாடுகளை வலியுறுத்த காவியம் என்றால் என்ன? காவியத்தின் நோக்கம் அல்லது பயன் என்ன? காவியத்தின் அடிப்படையான பண்புநலன்கள்

எவை? காவியத்தின் உயிர் அல்லது ஆத்மா எது? காவியத்தின் கருப்பொருளாக அமையத்தக்கது எது? போன்ற வினாக்களுக்கு விடைகூறும் வகையில் சிந்தித்திருப்பதை அவதானிக்கையில் காவியத்தை உருவாக்கிய கவிஞர்களின் உள்ளங்களிலும் இத்தகைய சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் இருந்த காரணத்தினால் தான் அவர்களால் கட்டுக்கோப்பான காவியங்களைப் படைக்க முடிந்தது என்ற முடிவுக்கு வரலாம். இதற்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில் காவியவியலாளர்கள் இவ்வினாக்களைத் தத்தமது கோட்பாடுகளுக்கு உறுதுணையாகப் பயன்படுத்தினர் என்பதையும் நாம் அறியலாம்.

இவ்வகையில் காவ்யம் ஒன்றின் அழகு அலங்காரம் குணம் ஆகிய இரண்டிலுமே தங்கியுள்ள போதிலும் இது தவிர அட்சரசங்காதம், சோபா, உதாஹாரண, த்ருஷ்டாந்த, ப்ரபத்தி, ஹேது, சம்சய, நிருக்த, சித்தி, அதிசய, அனன்வய, மனோரத, குணகீர்த்தன, சாரூப்ய, ப்ரியோக்தி ஆகிய சிறப்புடைய பண்புகள் காவியத்திற்கு அழகு சேர்ப்பனவாகக் கொள்ளத்தக்கன. (Warder, 1989) குறிப்பாக அலங்காரம் காவியத்தின் இன்றியமையாத அம்சம் என்ற சிந்தனை பலராலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அக்னி புராணத்தில் அலங்காரங்களோடு கூடியதும் குற்றமற்றதும், இடையீடு இல்லாத அழகிய சொல்வரிசையை கொண்டதுமான ரசிகனுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதே காவியமாகும் என கூறப்படுகின்றது.

संक्षेपाद्वाक्यमिष्टार्थ व्यवच्छिन्नापदावलि।
काव्यं स्फुरदलंकारं गुणवद्दोषवर्जितम्।

Agnipurana CCCXXXVII 6-7

வாமனர் அலங்காரங்களோடு கூடியதே காவியம். தோஷமற்ற சௌந்தர்யமே அலங்காரம் என்றும் கூறுகின்றார்.

काव्यं ग्राह्यमलंकारात्। सौन्दर्यमलंकारः।
स दोषगुणालंकारहानादानाभ्याम्।

Vamana, *Kavyalankarasutra 1.I.1-3*

போஜர் அலங்காரங்களால் அழகுபெற்ற ரசத்தோடு கூடிய குற்றமற்ற நற்குணங்கள் நிறைந்ததே காவியம் என்கிறார்.

निर्दोषं गुणवत्काव्यमलंकारैरलंकृतम्। रसान्वितं......।

Bhoja, *Sarasvatikanthabharana*, I-7

மம்மடர், காவியம் குற்றமற்றதாக சொல்லும் பொருளும் இணைந்து அலங்காரங்களால் அழகு பெற்று விளங்க வேண்டும் என்கிறார்.

तददोषौ शब्दार्थौ सगुणावनलंकृती पुनः क्वापि।

Mammata, *Kavyaprakasa*

ஹேமசந்திரர், வித்தியாநாதர், வாக்படர், ஆகியோரும் மேற்குறித்த கருத்துடன் ஒத்த நிலையில் காவியத்தை வரைவிலக் கணப்படுத்துகின்றர்.

अदोषौ सगुणौ सालंकारौ च शब्दार्थौ काव्यम्।

Hemachandra, *Kavyanusasana*

गुणालंकार सहितौ शब्दार्थौ दोषवर्जितौ काव्यम्।

Vidyanatha,
*Prataparudrayasobhusana*

साधुशब्दार्थसन्दर्भं गुणालंकारभूषितम्।
स्फुटरीतिरसोपेतं काव्यं कुर्वीत कीर्तये।

Vagbhata, *Vagbhatalankara* I -2

இவ்வகையில் எழுச்சிபெற்ற பல்வேறு காவியவியல் கோட்பாடுகளின் மூலக் கோட்பாடாக நாம் பொதுவாக அலங்காரக் கோட்பாட்டை கூறமுடியும். நாடகத்தின் வளர்ச்சியுடனே ரசக்கோட்பாடு எழுச்சி பெறுகிறது. உரைநடை இலக்கியங் களின் எழுச்சியுடன் ரீதி மற்றும் குணக் கோட்பாடுகள் எழுச்சிபெறலாயின. இவற்றுக்கிடையிலான ஆழ்ந்த தன்மை தொடர்பான ஆய்வின் வெளிப்பாடாக த்வனிக் கோட்பாடு அமைந்துள்ளது. பிற்காலத்தில் த்வனிக் கோட்பாட்டிற்கு மேலதிகமாக ஔசித்தியம் எனப்படும் பொருத்தப்பாடும் வக்ரோக்தி என்ற அழகும் இணைந்து காவியத்திற்கான அடிப்படை பண்புகளைச் செப்பனிட்டன. மிக அதிகமான காவியவியல் நூல்கள் கோட்பாடுகளை வலியுறுத்தவும், மறுத்துப் பேசவுமாக எழுச்சி பெற்றன. இதனால் சம்ஸ்கிருத காவியவியல் பரந்து விரியலாயிற்று. இவ்வகையில் காவியவியலாளர்கள் தாம் எடுத்துக்கொண்ட இலக்கியப்பொருளே இலக்கியத்திற்கு உயிரோட்டம் அளிப் பதென விவாதித்திருந்தாலும் இவர்களும் அலங்காரங்களுக்கு தனியிடம் அளித்துள்ளனர். எனவே அலங்காரங்களின் முக்கியத்துவத்தை இவர்களாலும் கூட மறுக்கமுடியவில்லை யென்பது தெளிவாகிறது. (சிவச்சந்திரன், 1989)

**சம்ஸ்கிருத அலங்காரங்களின் வகையீடு**

காவியவியல் வளர்ச்சியில் தனியிடம் பெறுகின்ற அலங்காரக் கோட்பாட்டிற்கமைய அலங்காரங்கள் முப்பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. அவையாவன சப்தாலங்காரங்கள், அர்த்தாலங்காரங்கள், மிஸ்ராலங்காரங்கள் என்பனவாகும். இவற்றுள் அலங்காரத்தை விளக்குகின்ற பெரும்பாலான காவியவியலாளர்கள் முதலிரு வகையினையே முதன்மைப்படுத்திக் கூறுவர். குறிப்பாக சப்தாலங்காரங்களை விட அர்த்தாலங்காரங்களே நுணுக்கமான வேறுபாடுகளைக் கொண்டு பலவாறு வகைப்படுத்தப்படுகின்றன.

காவிய வியலாளர்கள் தர்க்க ரீதியாகவும் விரிவாகவும் சம்ஸ்கிருத அர்த்தாலங்காரங்களை வகைப்படுத்தியுள்ளனர். அவற்றுள் முதன்மையான இரு வகையீட்டு முறைமை களாக பின்வருவன அமைகின்றன.

1. வித்யாநாதரின் ப்ரதாபருத்ரியத்தியம் கூறும் வகைப்பாடு
2. ருய்யகர் விஸ்வநாதர் வித்யாபூஷனர் ஆகியோரால் பின்பற்றப்பட்ட வகைப்பாடு

வித்யாநாதரின் ப்ரதாபருத்ரியத்தியம் கூறும் வகைப்பாட்டிற்கு அமைவாக 55 அர்த்தாலங்காலங்கள் சாதர்மிய மூலம், அத்யவசாய மூலம், விரோத மூலம், வாக்யநியாய மூலம், லோகவியவகார மூலம், தர்க்கநியாய மூலம், சிருங்கலாவைச்சித்ய மூலம், அபஹ்னவ மூலம், விசேஷ ணவைசித்திரிய மூலம் என ஒன்பது பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

ருய்யகர் விஸ்வநாதர் வித்யாபூஷணர் ஆகிய காவியவியலாளர்களால் இவை எட்டு பிரதான வகைகளாகப் பகுக்கப்பட்டன. அவையாவன சாத்ருஸ்யகர்ப்பம், விரோதகர்ப்பம், சிருங்கலாபந்தம், தர்க்க நியாயமூலம், வாக்யநியாயமூலம், லோக நியாயமூலம், கூடார்த்தப்ரத்திமூலம், சம்ஸ்லேஷ மூலம் ஆகியனவாகும். இவ்வகையீடானது குறித்தஅலங்காரங்களுக்குரிய பண்புகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைவதைக் காணமுடிகிறது.

இவ்வாய்வினை மேலும் தெளிவுபடுத்தும் வகையில் இரண்டாவது வகையீட்டின் உட்பிரிவுகளை விரிவாக நோக்குமிடத்து இவற்றுள் சாத்ருஸ்யகர்ப்பம் என்ற முதலாம் வகை சார்ந்த ஒற்றுமைத் தன்மையை அடிப்படையாகக் கொண்ட அலங்காரங் களாக முப்பத்தியொரு அலங்காரங்கள் இனங்காணப்படுகின்றன. அவையாவன உபமா, உபமேயோபமா, அநன்வய, ஸ்மரண, ரூபக, பரிணாம, ஸந்தேஹ,

ப்ராந்திமத், உல்லேக, நிஸ்ச்சய, அபஹ்னுதி, உத்பிரேக்ஷா, அதிசயோக்தி, துல்யயோகிதா, தீபக, ப்ரதிவஸ்துபமா, த்ருஷ்டாந்த, நிதர்சனா, வ்யதிரேகா, ஸஹோக்தி. விநோக்தி, சமாசோக்தி, பரிகரா, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஹேது, அனுகூல, ஆஷேப என்பனவாகும்.

இரண்டாவதாக அமையும் விரோதகர்ப் பவகையைச் சார்ந்தனவாக பன்னிரண்டு அலங்காரங்களை ஆசிரியர் கூறுகிறார் அவையாவன. விரோதம், விபாவனா, விசேஷோக்தி, அதிசயோக்தி, அசங்கதி, விஷமம், சமம், விசித்திரம்அதிகம் அன்யோன்யம் விஷேம், வ்யாகாதம் என்பனவாகும். சிருங்கலாபந்தம் வகையுள் நான்கு அலங்காரங்களை ஆசிரியர் கூறுகிறார். அவையாவன காரணமாலா, ஏகாவளி, மாலாதீபகம் உதாரம் ஆகியனவாகும். காவ்யலிங்கம், அநுமானம் ஆகிய இரண்டும் தர்க்க நியாயமூலவகையீட்டினுள் இடம்பெறுகின்றன. வாக்யநியாய மூலவகையீட்டினுள் எட்டு அலங்காரங்கள் இடம் பெறுகின்றன. அவையாவன யதாசங்க்யம், பர்யாயம், பரிவிருத்தி, பரிசங்க்யா, அர்த்தாபத்தி, விகல்ப்பம், சமுச்சயம், சமாதி என்பனவாகும்.

ஆறாவது லோக நியாயமூலவகைசார்ந்த அலங்காரங்களாக ஏழு அலங்காரங்கள் இடம் பெறுகின்றன. அவையாவன ப்ரத்யானீகம், ப்ரதீபம், மிலிதம், சாமான்யம் தக்குணம் அதக்குணம் உத்தரம் என்பனவாகும். கூடார்த்தப்ரத்தீமூலவகைசார்ந்த அலங்காரங்களாப் பதின்மூன்று அலங்காரங்கள் கூறப்படுகின்றன. சூஷ்மம், வாயஜோக்தி, வக்ரோக்தி, ஸ்வபாவோக்தி, பாவிகம், உதாத்தம், ரசவத், ப்ரேயஸ், ஊர்ஜஸ்வி, சமாஹித, பாவோதயம், பாவசக்தி, பாவசபலதா ஆகிய அலங்காரங்களே அவையாகும். இறுதியாக அமையும சம்ஸ்லேஷ மூல வகையில் ஸம்ஸ்ருஷ்டி, சங்கர ஆகிய இரு அலங்காரங்களுமே இடம் பெறுகின்றன.

**ஆய்வின் முக்கியத்துவம்**

அலங்காரக்கோட்பாட்டினைமையப்படுத்தி இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சம்ஸ்கிருத காவியவியல் கோட்பாடுகளில் ஆரம்ப கோட்பாடுகளாக கொள்ளத்தக்கது அலங்காரம், குணம் ஆகிய இரண்டுமேயாகும். பின்பு வக்ரோக்தி த்வனி, போஜகத்துவ கோட்பாடுகள் எழுச்சி பெற்றன. பிற்காலத்தில் அலங்காரக் கோட்பாட்டுடன் ரசம் ரீதி, த்வனி, வக்ரோக்தி, ஔயுச்சிய அனுமிதி, ஆகிய கோட்பாடுகள் பரந்து எழுச்சி பெற்றன. (Mukundamadava Sarma, 1968) காவியம் ஒன்றை விளங்கிக் கொள்வதற்கான அல்லது அழகுபடுத்துவதற்கான அடிப்படையான அம்சம் என்ன என்பது தொடர்பான வினா பாமகரால்பின்வருமாறுவரையறுக்கப்பட்டது. "பெண்ணின் முகமானது ஆபரணங்கள் இன்றி பிரகாசிக்காது அதேபோல் ரூபகம் முதலான அலங்காரம் இன்றி காவியம் அழகுபெறமாட்டாது. பாமகரின் இக்கருத்தின் சப்தாலங்காரங்கள், அர்த்தலங்காரங்கள் ஆகிய இரண்டும் மையப்படுத்தப்படுகின்றன. வாமனரின் குணம், ஆனந்த வர்த்தனரின் த்வனி ஆகியன அலங்காரங்களே என்பது ஆய்வுக்குரிய கருத்தாகும். (Nobel, 1925)

பலரால் படிப்படியாக வளர்த்தெடுக்கப் பட்டுள்ள அலங்காரக் கோட்பாட்டின் முக்கிய அம்சமான அலங்காரங்களை மிகவிரிவாக பகுப்பாய்வு செய்து அதிக அலங்காரங்களை வரைவிலக்கணம் செய்து நுணுக்கமான எடுத்துக்காட்டுக்கள் மூலம் விளக்கியவர் அப்பையதீட்சிதர் ஆவார். இவரது குவலயானந்தம் ஜயதேவர் எழுதிய சந்திராலோகத்தின் வழிநூலாக இருந்த போதிலும் அதனைவிட அதிகமான *15 அலங்காரங்கள் உட்பட சுமார் 115* அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்தி விளக்குகிறது. இவரது சிந்தனைகள் 16ம் நூற்றாண்டுக்குரியனவாக கருதப்படுகின்றன.ஐlஸ இவ்வகையில் இவ்வாய்வானது குவலயானந்தம் ஏனைய காவியவியல் நூல்களோடு ஒப்பிடும்

போது அர்த்தாலங்கார வகையில் ஒன்றான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை அதிகமாக வரைவிலக்கணப்படுத்தியுள்ளதென்பதை ஒப்பீட்டு ரீதியில் நிறுவும் வகையில் இவ்வாய்வு முதன்மைபெறுகிறது.

**ஆய்வின் நோக்கம்**

ஏனைய காவியவியல் நூல்களோடு ஒப்பிடும் போது குவலயானந்தம் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்துகிறது என்பதை ஒப்பீட்டு ரீதியில் நிறுவுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். சம்ஸ்கிருதக் காவியவியல் கோட்பாடுகளுள் அலங்காரக் கோட்பாட்டின் முதன்மையையும் அலங்காரக்கோட்பாட்டின் வளர்ச்சியில் அப்பையதீட்சிதரின் குவலயானந்தத்தின் வகிபாகத்தை வெளிப்படுத்துதல் இதன் துணை நோக்கங்களாகும்.

**இலக்கியமீளாய்வு**

சம்ஸ்கிருத காவியவியல் தொடர்பாக பல்வேறு ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. அவற்றுள் P.V.Kane, S.K.De, V.Ragavan, Kuppuswa misastri, K.Krishnamoorthy, Keith ஆகியோரின் ஆய்வுகள் மிக ஆழமான பங்களிப்பை வழங்கவல்லன. இவர்களுள் முன்னோடியான இந்திய அறிஞரான P.V.Kane காவியவியலின் ஒவ்வொரு கோட்பாடுகள் தொடர்பாகவும் வரலாற்று ரீதியாக விரிவாக ஆராய்ந்து அவற்றின் வளர்ச்சியினை ஆதார பூர்வமாக நிறுவியுள்ளார். இலங்கையைச் சேர்ந்த விஜயவர்த்தன 1970 களில் மேற்கொண்ட ஆய்வில் சமஸ்கிருத காவியவியல் கோட்பாடுகளான அலங்காரம், குணம், ரீதி ரசம், த்வனி, வக்ரோக்தி, ஔசித்யம் போன்ற கோட்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்துள்ளார் இதில் குறிப்பாக பயன்பாட்டு நிலையில் இருக்கும் அலங்காரங்கள் கொள்கை ரீதியில் பாமகருடன் ஆரம்பமாகி படிப் படியாக உத்படர், தண்டி, போன்றோரால் வளர்த்தெடுக்கப்பட்டு அதன் சீரானதும் செழுமையானதுமான எழுச்சி பண்டிதராஜ ஜெகந்நாதரின் ரசகங்காதரத்துடன் சற்று குறைவடைந்த நிலை காணப்படுவதையும் விளக்கிக் கூறுகிறார். (Vijayavardhana , G,1970)

வீரதுங்க என்பவரால் 1969ல் மேற்கொள்ளப் பட்ட ஆய்வொன்று சமஸ்கிருத காவியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து ஆராய்கிறது. காவியத்தின் தோற்றம் கவிதை உருவாக்கத்தின் மீது அலங்கார, ரஸ, வக்ரோக்தி, ஆகிய கோட்பாடுகள் கொண்டிருந்த ஆதிக்கம் குறித்தும் அது பேசுகின்றது. ருத்ரதாமனின் கிர்னார் சாசனம், காரவேலனின் வராதிகும்பா சாசனம், சமுத்ரகுப்தனின் அளகாபாத் சாசனம், வீர சேனனின் கல்வெட்டு, மண்டசோறிலுள்ள வத்ஸபட்டியின் கல்வெட்டு ஆகியவற்றிலுள்ள கவிதைப் பண்புகள் குறித்தும் விளக்கியுள்ளார். (Weerathunge , S ,1969)

மற்றொரு ஆய்வாக அமைவது சுமகேடொன் விஜயவர்த்தன என்ற அறிஞரால் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலாநிதிப்பட்ட ஆய்வுக்காக மேற்கொள்ளப்பட்ட "முற்கால சிங்களக்கவிதை இலக்கியங்களில் சமஸ்கிருத அலங்கார சாஸ்திரங்களின் செல்வாக்கு" என்ற தலைப்பில் அமைந்த ஆய்வாகும். காவியத்தின் சரீரம், ஆத்மா என்பன குறித்த வினாக்களுடன் ஆரம்பிக்கும் இவரது ஆய்வில் சமஸ்கிருத காவியவியல்கோட்பாடுகள் தனித்தனியாக விளக்கப்பட்டு, சிங்கள கவிதைக்கோட்பாடு, ஜாதகக் கதைகள் ஆகியவற்றிலுள்ள காவியவியற்சிந்தனைகள் ஒப்பிட்டு விளக்கப் படுகின்றன. (Wijayawardhana , G.D 1990)

அலங்காரங்களுள் குறிப்பிட்ட ஒரு வகை சார்ந்த அல்லது தனி அலங்காரங்கள் தொடர்பாகவும் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன. இவற்றுள் உத்பிரேக்ஷாலங்காரம் குறித்த தனிநிலை ஆய்வொன்று ஞரமடய என்ற அறிஞரால் 1982ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவர் தனது ஆய்வில் ஒவ்வொரு அலங்காரிகர் களும் உத்பிரேக்ஷாலங்காரத்தை எவ்வாறு வரைவிலக்கணப்படுத்துகின்றனர் என்பதை விளக்கிக் கூறி அதன் வகைகளையும் எடுத்துக் காட்டுகிறார். வரைவிலக்கணங்களை விளக்கும் போது சோபாகரர் மம்மடர் ஜயரதர் ஆகியோரின் வாத நியாயங்களை எடுத்துக்காட்டி அவர்களின் கருத்துக்களை பரிசீலிக்கிறார். முடிவாக ருய்யகரின் வரைவிலக் கணத்தை ஜகந்நாதர் மறுதலிப்பதையும் விளக்கிக் கூறுகிறார். (Shukla, 1982)

அலங்காரசாஸ்திரங்களில் ரூபக அலங்காரம் குறித்த வரலாற்றுப்பார்வையுடன் கூடிய கலாநிதிப்பட்ட ஆய்வொன்று 1982ல் Biswanath Bhattacharya வினால் மேற்கொள்ளப்பட்டது. அலங்காரக் கோட்பாடு குறித்த அறிமுகத்துடன் ஆரம்பித்து ரூபகாலங்காரத்தின் தோற்றுவாய், சொல்லுருவாக்கம், அதன் பல்வேறு வரைவிலக்கணங்கள் குறித்த நுண்ணாய்வு, ரூபகத்தின் வகைகளும் பயன்பாடும் ரூபகமும் சம்ஸ்கிருத இலக்கணமும் ரூபகமும் ஏனைய அலங்காரங்களும் ரூபகாலங்காரத்தின் குறைபாடுகள் என்பவற்றை மிக விரிவாக ஆய்வு செய்துள்ள ஆய்வாளர். தேவையான இடங்களில் மூலநூல்களிலிருந்து மேற்கோள்களையும் எடுத்தாண்டுள்ளார். (Bhattacharya, 1982)

வ்யாஜோக்தி தொடர்பான ஆய்வொன்று 1994ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் வாமனர் முதன்முதலில் இவ் அலங்காரத்தை எடுத்துக் கூறுவதைக் காட்டி தொடர்ந்து தண்டி மம்மடர் முதலியோரால் இது எவ்வாறு விளக்கப்படுகிறது இதற்கும் அவஹ்னுதி அலங்காரத்திற்கும் உள்ள வேறுபாடு வ்யாஜோக்தியின் வகைகள் என்பன கூறப்படுகின்றன. முதன்முதலில் வ்யாஜோக்தியில் நான்கு வகைகளைக் கூறியவர் சோபகரர் எனவும் ஏனையோர் பெரும்பாலும் இதனை வகைப்படுத்தவில்லை எனவும் கூறும் ஆய்வாளர் அவருக்குப் பின்னர் அப்பைய தீட்சிதரே இதனை வகைப்படுத்திக் கூறவதாக எடுத்துக்காட்டி விளக்குகிறார். (Tapasvi Nandi,1994)

### ஆய்வு முறைமை

இந்த ஆய்வில் ஆய்வுமுறைமையானது விளக்கிக்கூறும் விவரண முறைமையினை அடிப்படையாக கொண்டுள்ளது. தனியே விவரண முறைமையினை மாத்திரம் பின்பற்றின் அது காவியவியல் நூல்களிடையேயான ஒப்பீட்டினை வெளிப்படுத்தத் தவறிவிடும் என்பதால் ஒப்பியலாய்வு முறைமையும் தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளது.

ருய்யகர் விஸ்வநாதர் வித்யாபூஷணர் ஆகிய காவியவியலாளர்களால் பகுக்கப்பட்ட சாத்ருஸ்யகர்ப்பம், விரோதகர்ப்பம், சிருங்கலாபந்தம், தர்க்க நியாயமூலம், வாக்யநியாயமூலம், லோக நியாயமூலம், கூடார்த்தப்ரதீதிமூலம், சம்ஸ்லேஷ மூலம் ஆகிய சம்ஸ்கிருத அர்த்தாலங்கார வகையீட்டினை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் அலங்காரக்கோட்பாட்டினை விளக்கும் முதன்மை நூல்களான காவ்யாலங்காரம், காவ்யாதர்சம், அலங்காரசாரசங்கிரகம், காவ்யப்பிரகாசம், அலங்காரசூத்ரம், சந்திராலோகம், ப்ரதாபருத்ரீயம், குவலயா னந்தம், ரசகங்காதரம் ஆகிய ஒன்பது நூல்களும் ஒப்பியலாய்விற்கு எடுத்தாளப்படுகின்றன.

குறிப்பிட்ட அலங்காரம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்ட அலங்கார சாஸ் திரநூல்களில் எவ்விடத்தில் எடுத்து விளக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கும் வகையில் குறிப்பிட்ட நூலின் பெயர் சுருக்கமாகவும் அந்நூலின் உட்பிரிவுகளைக் குறிப்பிட உரோமன் இலக்கங்களும் சூத்திரங்கள் அல்லது சுலோகங்களை குறிப்பிட இந்துஅராபியஇலக்கங்களும் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட

தேவையான சில இடங்களில் சுலோகங்களின் வரிகளைக் குறிப்பிட சிறிய ஆங்கில அகரவரிசை எழுத்துக்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுமுடிவுகள்**

அலங்காரக்கோட்பாட்டினை விளக்கும் முதன்மை நூல்களான காவ்யாலங்காரம், காவ்யாதர்சம், அலங்காரசாரசங்கிரகம், காவ்யப்பிரகாசம், அலங்காரசூத்ரம், சந்திரா லோகம், ப்ரதாபருத்ரீயம், குவலயானந்தம், ரசகங்காதரம் ஆகிய ஒன்பது நூல்களிலும் குறிக்கப்பட்டிருக்கும் சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களாக உபமா, ரூபக, அபஹ்னுதி, உத்பிரேக்ஷா, அதிசயோக்தி, துல்ய யோகிதா, தீபக, வ்யதிரேகா, ஸஹோக்தி, சமாசோக்தி, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஆக்ஷேப ஆகிய 16 அலங்காரங்கள் மாத்திரமே அமைகின்றன.

ஏனைய சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களான உபமேயோபமா, அநன்வய, ஸந்தேஹ, ப்ரதிவஸ் துபமா, நிதர்சனா, த்ருஷ்டாந்த, ஸ்மரண, ப்ராந்திமத், விநோக்தி, பரிகரா, பரிணாம, உல்லேக, ஹேது ஆகியன மேற் குறித்த ஒன்பது நூல்களில் சிலவற்றில் குறிப்பிடப்படவில்லை. குறிப்பாக நிஸ்ச்சய, அனுகூல அகிய இரு அலங்காரங்களும் இவ்வகையீட்டில் அடங்குகின்ற போதிலும் மேற்குறித்த நூல்களில் எவற்றிலுமே குறிப்பிடப்படவில்லை.

முற்குறித்த உபமா, உபமேயோபமா, அநன்வய, ஸ்மரண, ரூபக, பரிணாம, ஸந்தேஹ, ப்ராந்திமத், உல்லேக, நிஸ்ச்சய, அபஹ்னுதி, உத்பிரேக்ஷா, அதிசயோக்தி, துல்யயோகிதா, தீபக, ப்ரதிவஸ்துபமா, த்ருஷ்டாந்த, நிதர்சனா, வ்யதிரேகா, ஸஹோக்தி, விநோக்தி, சமாசோக்தி, பரிகரா, ஸ்லேஷ, அப்ரஸ்துதப்ரசம்சா, அர்த்தாந்தரநியாஸ, பர்யாயோக்த, வ்யாஜஸ்துதி, ஹேது, அனுகூல, ஆக்ஷேப என அமையப்பெற்ற முப்பத்தியொரு சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களுள் காவ்யாலங்காரத்தில் பாமஹர் *22* அலங்காரங்களையும்[5], காவ்யாதர்சத்தில் தண்டி *18* அலங்காரங்களையும் [6] அலங்காரசாரசங்கிரகத்தில் உத்படர் *21* அலங்காரங்களையும்[7], மம்மடர் தனது காவ்யப்பிரகாசத்தில் 26 அலங்காரங்களையும் [8] விளக்கியுள்ளனர். ருய்யகர் தனது அலங்கார சூத்ரத்திலும்[9] ஜயதேவர் தனது சந்திராலோகத்திலும் [10] வித்யாநாதர் தனது ப்ரதாபருத்ரீயத்திலும் [11] ஜகந்நாதர் தனது ரசகங்காதரத்திலும் [12] இவற்றுள் *28* அலங்காரங்களை விளக்கி வரையறை செய்துள்ளனர். ஆயினும் நிஸ்ச்சய, அனுகூல ஆகிய இரு அலங்காரங்களைத் தவிர ஏனைய இருபத்தொன்பது அலங்காரங்களையும் குவலயானந்தம் [13] விளக்குகிறது. *(அட்டவணை1)*

**அட்டவணை1**

**காலந்தோறும் முக்கிய காவியவியலாளர்கள் விளக்கிக் கூறியுள்ள சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்கள்**

| சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரத்தின் பெயர் | காவ்யாலங்காரம்:பாமஹர் (பரிச்சேதம். ஸ்லோகம்) | காவ்யாதர்சம்:தண்டி (பரிச்சேதம். ஸ்லோகம்) | அலங்காரசாரசங்கிரகம்:உத்படர் (வர்கம். ஸ்லோகம்) | காவ்யப்பிரகாசம்:மம்மடர் (உல்லாசம்.ஸ்லோகம்.வரி) | அலங்காரசூத்ரம்:ருய்யகர் (சூத்ரம்) | சந்திராலோகம்:ஜயதேவர் (மயூகம்.ஸ்லோகம்) | ப்ரதாபருத்ரீயம்:வித்யாநாதர் (ப்ரகரணம். ஸ்லோகம்) | குவலயானந்தம்:அப்பயதீக்ஷிதர் (ஸ்லோகம்) | ரசகங்காதரம்:ஜகந்நாதர் (ஆனனம்.ஸ்லோகம்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உபமா | II.30 | II.14 | 1.15 | X. 1a | 11 | V.11 | VIII.1 | 6 | II.17 |
| உபமேயோபமா | III.3,37 | | 5.65 | X. 5d | 13 | V.13 | VIII.3 | 11 | II.18 |
| அநன்வய | III.3,45 | | 6.71 | X. 5abc | 12 | V.12 | VIII.2 | 10 | II.19 |
| ஸ்மரண | | | | X. 46abc | 14 | V.31,32 | VIII.4 | 24,25 | II.22 |
| ரூபக | II.21 | II.66 | 1.11 | X. 7ab | 15 | V.18 | VIII.5 | 17 | II.23 |
| பரிணாம | | | | | 16 | V.22 | VIII.10 | 21 | II.28 |
| ஸந்தேஹ | III.3,43 | | 6.69 | X. 6cd | 17 | V.31,32 | VIII.11 | 24,25 | II.29 |
| ப்ராந்திமத் | | | | X. 46cd | 18 | V.31,32 | VIII.12 | 24,25 | II.30 |
| உல்லேக | | | | | 19 | V.23 | VIII.14 | 22 | II.31 |
| நிஸ்ச்சய | | | | | | | | | |
| அபஹ்னுதி | III.2,21 | II.304 | 5.54 | X. 10ab | 20 | V.24 | VIII.13 | 26 | II.32 |
| உத்ப்ரேக்ஷா | II.91 | II.221 | 3.39 | X. 6ab | 21 | V.29 | VIII.15 | 32 | II.33 |
| அதிசயோக்தி | II.81 | II.214 | 2.34 | X. 14,15 | 22 | V.46 | VIII.14 | 36 | II.34 |
| துல்ய யோகிதா | III.2,27 | II.330 | 5.58 | X. 18cd | 23 | V.51,52 | VIII.36 | 44 | II.35 |
| தீபக | II.25 | II.97 | 1.14 | X. 17 | 24 | V.53 | VIII.37 | 48 | II.36 |
| ப்ரதிவஸ்தூபமா | II.34 | | 1.22 | X. 15d,16ab | 25 | V.55 | VIII.38 | 51 | II.37 |
| த்ருஷ்டாந்த | | | 6.75 | X. 16cd | 26 | V.56,57 | VIII.39 | 52 | II.38 |
| நிதர்சனா | III.2,33 | II.348 | | X. 11cd | 27 | V.58 | VIII. | 53 | II.39 |
| வ்யதிரேகா | II.75 | II.180 | 2.29 | X. 19ab | 28 | V.59 | VIII.41 | 57 | II.40 |
| ஸஹோக்தி | III.3,39 | II.351 | 5.66 | X. 26cd | 29 | V.60 | VIII.17 | 58 | II.41 |
| விநோக்தி | | | | X. 27ab | 30 | V.61 | VIII.18 | 59-60 | II.42 |
| சமாசோக்தி | II.79 | II.205 | 2.33 | X. 11ab | 31 | V.62 | VIII.19 | 61 | II.43 |
| பரிகரா | | | | X. 32ab | 32 | V.39 | VIII.43 | 62 | II.44 |
| ஸ்லேஷ | III.1,14 | II.310 | 4.50 | X. 10cd | 33 | V.63 | VIII.42 | 64 | II.45 |
| அப்ரஸ்துதப்ரசம்சா | III.2,29 | II.340 | 5.59 | X. 12cd | 34 | V.66,67 | VIII.46 | 66 | II.46 |
| அர்த்தாந்தரந்யாஸ | II.71 | II.169 | 2.28 | X. 23 | 35 | V.68 | VIII.51 | 122-123 | II.68 |
| பர்யாயோக்த | III.1,8 | II.295 | 4.47 | X. 29ab | 36 | V.70 | VIII.47 | 68-69 | II.47 |
| வ்யாஜஸ்துதி | III.2,31 | II.343 | 5.60 | X. 26ab | 37 | V.71 | VIII.45 | 70-71 | II.48 |
| ஹேது | II.86 | II.235 | | | | | | 167-169 | |
| அநுகூல | | | | | | | | | |
| ஆக்ஷேப | II.68 | II.120 | 2.25 | X. 20cd | 38 | V.72 | VIII.44 | 73-74 | II.49 |

### முடிவுரை

முழுமையாக நோக்குமிடத்து ஏனைய காவியவியல் நூல்களோடு ஒப்பிடும் போது குவலயானந்தம் அதிக எண்ணிக்கையான சாத்ருஸ்யகர்ப்ப அலங்காரங்களை வரைவிலக்கணப்படுத்துகிறது என்பதை ஒப்பீட்டு ரீதியில் அறியமுடிகிறது. பொது நோக்கில் இவ்வாய்வானது தமிழ், சம்ஸ்கிருத மொழிகளிடையிலான ஆழ்நிலை உறவுகள் குறித்து சமுதாயத்தில் நிலவும் இன மத பேதமற்ற நடுநிலையான சிந்தனைகளை மேலும் வளர்த்தெடுக்கமுனைந்து நிற்கின்றது. குறிப்பாக சமுதாயமட்டத்தில் நிலவும் பல்வேறுபட்ட மொழிச்சிந்தனைகளைத் தூண்டி சம்ஸ்கிருத காவியவியல் குறித்தும் அலங்காரக்கோட்பாடு குறித்தும் புதிய ஆய்வுகளுக்கான புலங்களை இனங்காட்டியுள்ளது. இலங்கைத் தமிழ் மக்களின் மொழிப்பற்றினை பாதிக்காத வகையில் பிறமொழி என்றவகையில் சம்ஸ்கிருதத்தின் காவியவியல் கோட்பாடுகளை அறிமுகம் செய்வதன் மூலம் அவர்களின் வடமொழி தொடர்பான உணர்வு குறித்த மீளாய்வுப்பார்வைக்கு வழி சமைத்து எதிர்காலத்தில் இத்துறையில் கூடியகவனம் செலுத்தும் சமுதாயமாற்றத்தினையும் இவ்வாய்வு நாடி நிற்கிறது. அண்மைக்காலமாக மாற்றமடைந்து வரும் ஆய்வு நோக்கும் மொழியியல் ரீதியிலான ஆழமான ஆய்வுகளும் வேறுபல மொழிகளுடனான ஒப்பியல் ஆய்வுகளும் சம்ஸ்கிருதத்திற்குப் புதிய பரிமாணத்தை வழங்கியுள்ளன. இன்றைய நிலையில் இவ்வாய்வு இலங்கையில் சம்ஸ்கிருத காவியவியல் குறித்தும் அலங்காரக்கோட்பாடு குறித்தும் புதிய ஆய்வுகளுக்கான தேவையினை இனங்காட்டி நிற்பதுடன் புதிய ஆய்வுமுயற்சிகளையும் ஊக்குவிக்கிறது.

### உசாத்துணை நூல்கள்


1. Alankara Sutra of Rajanaka Ruyyaka - K.Sambasiva Sastri Trivancore : The Maharani Regent , 1926
2. Biswanath Bhattachariya, (1982) A History Of Rupaka In Alankarasastra - Varanasi : Chaukhamba Orientalia
3. Chandraloka of Shri Jeyadeva ed. By AnantharamasastriBanaras:Chowkhamba Sanskrit Series Office, 1938 p. 170
4. Kane , P.V, (1985) Out Lines Of The History Of Alamkara Literature Part I The Indian Antiquaryxli Delhi : Swati Publication , 1985 - pp.124-128
5. Kane, R.V, (1994), History Of Sanskrit Poetics Delhi : Motilal Banarsidass Pub. , 1994 - pp.372-379
6. Kavya Prakasa of Mammatahar Dutt Sharma Poona : Oriental Book Agency , 1951
7. Kavyadarsa of Dandin ed. By Belvelkar S K., Poona:sl, 1924. p47+82
8. Kavyalankara of Bhamaha ed. By Naganantha Sastri New Delhi : Motilal Banars, 1991 p 134.

9. Kavyalankara Sara Samgraha of Udbhata , With Laghuvritti Of Induraja Sl:sn , 1925
10. KEITH, A., (1927), Berriedale Classical sanskrit literature / by A.Berriedale Keith.-- 2nd ed.- London : Oxford University Press, 1927.
11. Kuvalayananda Appayadiksitnarayan Ramacharya Bombay : Satyabamabai Pandurang , 1942
12. Mukunda Madhava Sharma, (1968), The Dhvani Theory In Sanskrit Poetics Varanasi : Chowkhamba Sanskrit Series Office , 1968 - pp.3—11
13. Nobel , J., (1925), The Foundations Of Indian Poetry And Their Historical Development Calcutta : , 1925 - pp.85-93
14. Pradaparudriyam of Vidyanathar ed. By Sankararama Sastri Mylapore : Sri Balamanorama Press , 1931
15. Rasagangadhara of Sri Jegannathar ed.by Durgaprasad Bombay: Pandurang Javaji, 1939 p. 706
16. சிவச்சந்திரன், (1989) சம்ஸ்கிருதத்தில் தோத்திர இலக்கியம் – சிவானந்தலகரி சௌந்தர்யலகரி ஆகியவற்றுடன் விசேட தொடர்புபடுத்திய ஆய்வு –சம்ஸ்கிருத முது கலைமாணிப் பட்டத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு, சம்ஸ்கிருதத் துறை யாழ் பல்கலைக்கழகம்.
17. Shukla , C.P ., A (1982), Controversy On The Concept Of Utpreksa Journal Of The Oriental Institutexxxi Baroda : M.S.University Of Baroda , pp.365-370
18. Tapasvi Nandi, (1997), Bhava Bhuti And Sanskrit Literary Criticism Annals Of The Bhandarkar Oriental Research Institutelxxvii Pune : Bhandarkar Oriental Research Institute , pp.141-150
19. Vijayavardhana , G ., (1970 ) Out Lines Of Sanskrit Poetics Varanasi : Chowkhamba Sanskrit Series Office , pp.1—56
20. Warder , A.K , (1989), Indian Kavya Literature V.1 Delhi : Motilal Banar Sidass , pp.76-79
21. Weerathunge , S., (1969) The Origin And Development Of The Sanskrit Prose Style University Of Peradeniya Phd Thesis : Not Published.
22. Wijayawardhana , G.D., (1990) , The Infiuence Of Sanskrit Alankara Sastra On Early Sanskrit Poetry Colombo University Phd Thesis : Not Published.